# அனைத்துலகத் தேர்வு 2005

**International Examination 2005**

1948

# தமிழ்மொழி

## வளர்நிலை 3

சுட்டெண் : ____________________

நேரம் : 90 நிமிடங்கள்

மொத்தப்புள்ளிகள் : 100

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடலை இயற்றியவர் ___பாரதியார்___ .
( வள்ளுவர் , பாரதியார் , பெரியார் )

1. தமிழரின் இனிய பண்புகளில் ஒன்று ________________ .
( சண்டையிடல் , விருந்தோம்பல் , சினத்தல் )

2. பொதுமறை எனக் கூறப்படும் நூல் ________________ ஆகும்.
( திருக்குறள் , சிலப்பதிகாரம் , அகநானூறு )

3. அதியமானின் உயர்ந்த குணத்தைப் பாராட்டியவர் ________________ .
( பாரதியார் , ஔவையார் , திருவள்ளுவர் )

4. நீச்சல் உடல் உறுப்புகளை ________________ .
( வகைப்படுத்தும் , உறுதிப்படுத்தும் , துன்பப்படுத்தும் )

5. நாய் குரைக்கும். அதுபோல் யானை ________________ .
( உறுமும் , பிளிறும் , கத்தும் )

6. பண்டாரவன்னியன் ________________ எதிர்த்துப் போராடினார்.
( யேர்மனியரை , இந்தியரை , ஆங்கிலேயரை )

7. பாக்குநீரிணையைக் கடந்து உலகசாதனை புரிந்த சிறுவன் ________________ .
( குற்றாலீசுவரன் , இளங்கோ , சுந்தரேசன் )

8. பனிகாலத்தில் சிறுவர்கள் ________________ உருண்டைகள் செய்து விளையாடுவார்கள்.
( பனிக்கூழில் , பூம்பனியில் , பூமாலையில் )

9. பெரியார் தமிழர்களின் ________________ ப் பாடுபட்டார்.
( தாழ்வுக்காக , உயர்வுக்காக , பணத்திற்காக )

10. நாம் நல்ல தமிழ்நூல்களைத் தேடிக் ____________________ .
( கற்போம் , கற்பார்கள் , கற்பேன் )

11. 'பொன்பூச்சொரியும்' என்னும் பாடலைப் பாடியவர் ____________________ .
( சின்னத்தம்பிப் புலவர் , ஆறுமுகநாவலர் , இளங்கோவடிகள் )

12. எழிலியால் அஞ்சல் ____________________ .
( அனுப்பினாள் , அனுப்புகின்றாள் , அனுப்பப்பட்டது )

13. 'புகழ்' என்பதன் எதிர்ச்சொல் ____________________
( திகழ் , இகழ் , அகழ் )

14. கழனி என்றால் ____________________ என்று பொருள்படும்.
( வயல் , வீடு , பள்ளி )

15. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
____________________ பின் செல்வர்.
( அழுதுண்டு , தொழுதுண்டு , பழுதுண்டு )

16. தண்ணீர் ____________________ என்று ஓடியது.
( மள மள , குடு குடு , சல சல )

17. மக்கள் பேருந்தில் ____________________ க் கொண்டிருக்கின்றார்கள்.
( ஏறி , ஏறு , ஏற்று )

18. '50' என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________ .
( அம்பது , அயிம்பது , ஐம்பது )

19. இன்று சனிக்கிழமை. நேற்று ____________________ .
( ஞாயிற்றுக்கிழமை , வெள்ளிக்கிழமை , திங்கட்கிழமை )

20. ஈழத்தில் 'அடங்காப்பற்று' என்று அழைக்கப்படும் பகுதி
____________________ .
( கொழும்பு , யாழ்ப்பாணம் , வன்னி )

20 புள்ளிகள்

2. கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| சிரித்துச் சிரித்து | துள்ளித் துள்ளி | மெல்ல மெல்ல | ஏற இறங்க |
| அக்கம் பக்கத்தில் | | ~~தாவித் தாவி~~ | |

எ+கா கங்காரு ___தாவித் தாவி___ ஓடியது.

1. முதியவர் ____________________ நடந்து சென்றார்.
2. மாறன் அப் புதியவரை ____________________ ப் பார்த்தான்.
3. சிறுமி திரும்பிப் பார்க்கும்பொழுது ____________________ யாரும் இல்லை.
4. நண்பர்கள் ____________________ மகிழ்ந்தனர்.
5. பசுக்கன்று ____________________ த் தாயிடம் ஓடியது.

5 புள்ளிகள்

3. உறுப்பமைய எழுதுக.

விருந்தோம்பல் என்பது ஒரு சிறந்த பண்பாகும்.

______________________________________________

விளையாட்டு, ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தும்.

______________________________________________

5 புள்ளிகள்

4. கீழே உள்ள சொற்களில் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ~~கேட்டு~~ | கூறுகின்ற | பறந்த | கொடுத்த | நடித்த | மலர்ந்த | மீட்டுகின்ற |

எ+கா தாயின் தாலாட்டைக் கேட்டு க் குழந்தை உறங்கியது.

1. சிறுமி ______________ வீணை இசை இனிமையாக இருக்கின்றது.
2. பூங்காவில் ______________ மலர்கள் அழகாக இருக்கின்றன.
3. மாணவர்கள் ______________ நாடகத்தை ஆசிரியர் பாராட்டினார்.
4. சிலப்பதிகாரம் ______________ செய்திகள் பழந்தமிழர் பண்பாட்டை விளக்குகின்றன.
5. உயரத்தில் ______________ பட்டம் மரத்தில் சிக்கியது.

5 புள்ளிகள்

5. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி, வாக்கியங்களை நிறைவு செய்க.

எ+கா விளைந்த நெல்லை அறுவடை செய்வார்கள் .

1. யாழ்ப்பாணத்து நல்லூரில் வில்லவராய முதலியார் ______________ .
2. தமிழை முத்தமிழ் என்று பெருமையாகக் ______________ .
3. வன்னிப் பகுதியை முன்பு வன்னியர்கள் ______________ .
4. அம்மா நேற்றுச் சட்டையைத் தைத்து ______________ .
5. நான் ஒவ்வொருநாளும் நாட்குறிப்பு ______________ .

10 புள்ளிகள்

6. கட்டங்களில் விடப்பட்ட எழுத்துகளை எழுதி, நாள்கள், மாதங்களின் பெயர்களை எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பு | த | ன் | ஐ | | ப | சி |
| ர | | யா | ழ | ன் | | த் |
| ட் | | ஆ | | ணி | வ் | |
| டா | | | வெ | | வா | ரை |
| தி | | க | ள் | | ய் | |
| | | | | ஞா | யி | |
| | | ங் | கு | னி | | |

| நாள்கள் | மாதங்கள் |
|---|---|
| எ+கா புதன் | புரட்டாதி |
| | |
| | |
| | |
| | |
| | |

10 புள்ளிகள்

7. கீழே காணும் பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

எ+கா

கனிமொழி மூன்றாம் வகுப்பில் ______கல்வி______ கற்கின்றாள். அவள் வகுப்பில் மிகவும் ______________ . அவள் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்வாள். அவளின் தோழியின் பெயர் குழலி. ______________ சேர்ந்து விளையாடுவார்கள். கனிமொழி நன்றாக ஓவியம் ______________ . அவள் ஓவியப் போட்டியில் பங்குபற்றுவாள். அவளது ______________ எப்பொழுதும் முதலாம் இடத்தைப் பெறும். எல்லோரும் அவளைப் பாராட்டுவார்கள். அவளுக்கு அது ______________ இருக்கும்.

| | | |
|---|---|---|
| இருவரும் | மகிழ்ச்சியாக | ~~கல்வி~~ |
| கெட்டிக்காரி | ஓவியம் | வரைவாள் |

10 புள்ளிகள்

8. படத்தைப் பார்த்து, மிகச் சரியான சொல் / சொற்றொடருக்கு நேரே புள்ளடி ( ✖ ) இடுக.



எ+கா இப்படத்தில் காணப்படும் காட்சி

- வயற்கரை ☐
- கடற்கரை ☒
- பூந்தோட்டம் ☐

1. பிள்ளைகள் உருவம் கட்டி விளையாடுவது
   - தண்ணீரில் ☐
   - குப்பையில் ☐
   - மண்ணில் ☐

2. அப்பா
   - சாய்ந்து இருக்கின்றார். ☐
   - விழுந்து கிடக்கின்றார். ☐
   - நித்திரை கொள்கின்றார். ☐

3. அப்பாவும் அம்மாவும் பிள்ளைகள் விளையாடுவதைப் பார்த்து
   - துக்கப்படுகின்றார்கள். ☐
   - மகிழ்கின்றார்கள். ☐
   - கோபப்படுகின்றார்கள். ☐

4. பந்து எறிந்து விளையாடுபவர்கள்
   - சிறுவர்கள் ☐
   - குழந்தைகள் ☐
   - முதியவர்கள் ☐

5. இவர்கள் கடற்கரைக்கு வந்திருப்பது
   - குளிர்காலத்தில் ☐
   - கோடை காலத்தில் ☐
   - பனிகாலத்தில் ☐

10 புள்ளிகள்

9. கீழே காணும் பகுதியைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை எழுதுக.

கடற்குதிரை கடலில் வாழும் ஒரு விந்தையான உயிரி. அதன் தலை குதிரையின் தலையைப் போல இருக்கும். ஆனால், அதற்குக் கால்கள் இல்லை. அதன் வால் வளைந்து சுருண்டு இருக்கும். அது கடலில் வாழ்ந்தாலும், மற்றைய கடல் வாழ் உயிரினங்கள் போல் நீந்துவதில்லை. அது நேராக நிமிர்ந்தே நீந்திச் செல்லும்.

கடற்குதிரை தனக்கு எதிரிகளால் இடர் வரும்பொழுது, செடிகள் அல்லது பாறைகளுக்கு இடையில் ஒளிந்து கொள்ளும். தனது நிறத்தையும் உடனே மாற்றிக் கொள்ளும். அது புழு, பாசி போன்றவற்றைத் தின்று உயிர் வாழும்.

எ+கா கடற்குதிரையின் தலை எதைப் போல இருக்கும்?
குதிரையின் தலையைப் போல

1. கடற்குதிரை எங்கே வாழும்?

______________________________

2. அதன் வால் எப்படி இருக்கும்?

______________________________

3. அது எவ்வாறு நீந்திச் செல்லும்?

______________________________

4. கடற்குதிரை தனக்கு இடர் வரும்பொழுது என்ன செய்யும்?

______________________________

5. கடற்குதிரை எவற்றை உண்டு உயிர் வாழும்?

______________________________

10 புள்ளிகள்

10. படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

15 புள்ளிகள்